எல்லாம் நொறுங்கி விடுகிறது. ஆகவே, அதற்கான அரைக்கின்ற ப்ளாஸ்டிக் மில்லை உருவாக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனி மில் தேவையில்லை. தஞ்சையிலே ஒரு மில் இருக்கிறது. நாகப்பட்டினத்தில் மில் இருக்கிறது. என்னுடைய வேளாண்மை மானிய கோரிக்கை வந்தபோது மாண்புமிகு உறுப்பினருக்கே பதில் சொல்லியிருக்கிறேன். எனவே, இங்கே அரிசியாக அது தக்க முறையிலே அதனுடைய தன்மை கெடாத அளவுக்கு இங்கே அரைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நெல்லை விளைவிக்கக்கூடிய உழவர்கள் அதிக வருவாயைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திலேதான் இது போன்ற புதிய வாசனை நெல்லை இன்றைக்கு அறிமுகம் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 531, திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை. வினா எண் 532, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

532—

செங்கல்பட்டு ஓரியண்ட் கெமிக்கல் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர் பாலாற்றில் கலப்பதைத் தடுத்தல்.

*22310— திரு. செ. து. வரதராஜன் :
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு ஓரியண்ட் கெமிக்கல் சாராயத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கெமிக்கல் கழிவு நீர் செங்கல்பட்டு முனிசிபல் குடிநீருடன் கலந்து பொது மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்தக் கழிவு நீர் பாலாற்றில் கலக்காமலும், விவசாயத்திற்குப் பயன்படும் தண்ணீரில் கலக்காமலும் இருக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1994 மே 5]

(அ) மற்றும் (ஆ): செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், வேதநாராயணபுரத்தில் உள்ள திருவாளர்கள் ஓரியண்ட் கெமிக்கல்ஸ் அண்டு டிஸ்டிலரிஸ் லிமிடெட், தொழிற்சாலை கழிவு நீரை ஒமலூர் கால்வாயில் வெளியேற்றியது. இந்தக் கால்வாய் கரையில் ஏற்பட்ட உடைப்பின் மூலமாக, அத்தொழிற்சாலையின் கழிவுநீர் இறுதியாக பாலாற்றில் குடிநீர் வழங்கும் தலைப்பீடத்திலிருந்து நீரோட்டத்திற்கு எதிர்த் திசையில் சுமார் 500 மீட்டர் தொலைவில் கலந்தது கண்டறியப்பட்டது. அத்தொழிற்சாலைத் கழிவு நீரை ஒமலூர் கால்வாயில் வெளியேற்றியதற்காகவும் குடிநீர் வழங்கும் பாலாற்று நீரோட்டத்தில் கலந்ததற்காகவும் உடனடியாக தொழிற்சாலை மீது சட்டப்பூர்வமாக நடவடிக்கைகள் தமிழ் நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் எடுக்கப்பட்டு, கழிவு நீர் கலப்பது நிறுத்தப்பட்டது.

முற்பகல் 10-45

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் சென்ற முறை இதே போன்ற கேள்விகளுக்கு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் இருக்கின்ற அனைத்துப் பெரிய அதிகாரிகளும், கெமிக்கல் லேப் வேனும், டெக்னிஷியன்களும், சிப்பந்திகளும் வருகை தந்து காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையில் சிறப்பான முறையில் ஆய்வு செய்து அங்கே இது போன்ற தவறு நடந்து இருக்கிறது என்பதைக் கண்டு அறிந்து உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதற்காக தகுந்த ஆதாரங்களை எல்லாம் அப்போதே அங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அந்த உடைக்கப்பட்ட கால்வாயை மூடிவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் இப்போதும் அதே நிலைமையில் இருக்கிறது என்பதை தெரிவித்து மறுபடியும் அதை ஆய்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய, மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய முயற்சியின் காரணமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து அந்த ஆலையைப் பார்வையிட்டதாகச் சொன்னார்கள். அந்தக்குழுவினரோடு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. து. வரதராஜன் அவர்களும் சென்று இருக்கிறார்கள், அதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலை சுத்திகரிக்கப்படாத அல்லது முழுமையாக சுத்திகரிக்கப்படாத தொழிற்

[1994 மே 5

சாலை. கழிவு நீரை தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே வெளியேற்றக் கூடாது எனவும், சுத்திகரிக்கப்பட்ட தொழிற் சாலை கழிவு நீரை முழுமையாக தொழிற்சாலை வளாகத்திற் குள்ளே மீன் வளர்ப்புக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந் தனைகளுக்கு உட்பட்டுதான் இந்தத் தொழிற்சாலைக்கு 31—3—1992 முடிய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 1974—ஆம் ஆண்டு மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் இசைவாணை அளித்தது. ஆனால் அந்த இசைவாணைக்கு மாறாக இந்தத் தொழிற்சாலை கழிவுநீரை திறந்த வெளிக் கால் வாய் மூலமாகவும், பி. வி. சி. குழாய் மூலமாகவும் ஒமலூர் கால்வாயில் வெளியேற்றுவது அறியப்பட்டது. இந்தக் கால் வாயின் கரையில் ஏற்பட்ட உடைப்பின் மூலமாக மேற்கண்ட தொழிற்சாலைக் கழிவு நீர் இறுதியாக பாலாற்றில் குடிநீர் வழங்கும் தலைப்பீடத்திலிருந்து நீரோட்டத்திற்கு எதிர் திசை யில் சுமார் 500 மீட்டர் தொலைவில் கலந்தது கண்டறியப் பட்டது. இதனைப் பார்த்தவுடன் வாரியத்தின் இசைவாணை இன்றி தொழிற்சாலையை இயக்கியதற்காகவும், தொழிற்சாலைக் கழிவு நீரை தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே பாலாற்றில் வெளியேற்றியதற்காகவும் சட்டப்படி இந்த தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விளக்க நோட்டீஸ் கொடுத்தது. அதற்குப் பிறகு 3 நிபந்தனை களுடன் அந்தத் தொழிற்சாலையை இயக்க வேண்டும் என்று (1) தொழிற்சாலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைத் தேக்கி வைக்க மண் தொட்டிகளின் கரைகளை செங்கல் சுவர் அமைத்து பலப்படுத்த வேண்டும். தொட்டிகளில் நிரம்பி வழிதலைத் தவிர்க்கும் பொருட்டு தொட்டிகளின் மேல், மேல் மட்டத்திற்கும் நீர் மட்டத்திற்கும் குறைந்தபட்சம் 45 சென்டி மீட்டர் இடை வெளி இருக்க வேண்டும். மேற்கண்ட வேலைகள் 31—1—1994-க்குள் செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அன்றைக்கு விதித்தது. இந்த வேலைகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவித்து இருக்கிறது. (2) தொழிற்சாலைக் கழிவு நீரை ஒமலூர் கால்வாயில் வெளியேற்றுவதை தொழிற்சாலை உடனடியாக நிறுத்தவேண்டும் (3) 18—10—1993 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர், சுற்றுப்புறம் மற்றும் வனத் துறைச் செய லாளர் மற்றும் செங்கற்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. து. வரதராஜன் ஆகியோர் ஆலையைப் பார்வையிட்ட போது அந்த நிர்வாகம் ஒத்துக்கொண்டபடி தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் உதவியுடன் செங்கற்பட்டு நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் பாலாற்றில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தை தொழிற் சாலையின் மேற்புறத்தில் பாலாற்றில் அமைக்க துரிதமான நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அன்றைக்கு வற்புறுத்தப் பட்டது. இதன்படி அந்தப் பணியைச் செய்வதற்கு அந்த ஆலை யினுடைய நிர்வாக இயக்குநர் ஒத்துக்கொண்டு இருக்கிறார். இந்தத் தொழிற்சாலை 20—11—1993 ஆம் நாளிட்ட கடிதத் தில் மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும்

தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இந்தத் தொழிற்சாலையின் கழிவுநீர் மாசுத் தடுப்பு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-50

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அத்தனை செய்திகளும் உண்மையான செய்திகளாக இருக்கின்றன. ஆனால் அந்தத் தொழிற்சாலையினுடைய உரிமையாளர்களாக இருக்கின்றவர்கள் ஒரு நிபந்தனைக்குக் கட்டுப்பட்டார்கள். இதுபோன்று பல முறை—ஒரு முறை அல்ல, பலமுறை கலந்துகொண்டு, அந்த முனிசிபாலிட்டி அந்தத் தண்ணீரை வெளியே எடுத்துவிட்டு அதைக் கிளீன் செய்து, பிறகு தான் நகராட்சிக்கு விநியோகம் செய்கின்ற நிலைமை, ஒருமுறை அல்ல, பலமுறை நடந்திருக்கிறது. ஆகவே, அந்த உரிமையாளர் அவர்கள் அந்த பம்ப்பிங் ஸ்டேஷனை அவர்களே கிரையமாக எடுத்துக்கொண்டு, மேல் இடத்தில் அங்கே ஒரு புதிய பம்ப்பிங் ஸ்டேஷன் கட்டுவதற்கு அவர்கள் ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் வாக்குறுதி கொடுத்தார்களே தவிர இதுவரை எந்தவிதமான அடிப்படை நிலையான வேலைகளைக்கூட அவர்கள் அங்கே துவக்கவில்லை. அதே போன்று, அந்தத் தொழிற்சாலையில் இருக்கின்ற கழிவு நீரை அவர்களால் அப்புறப்படுத்த முடியாது. ஆகவே, கீழே இருக்கிற அந்த பம்ப்பிங் ஸ்டேஷனை மேலே கட்டினால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒரு நபரா, 60 ஆயிரம் பேரா என்று பார்க்கின்ற போது, இதுகுறித்து, தேவையான துரிதமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் செ ணத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ால்லியதற்கு இணங்க, அந்த ஆலையினுடைய நிர்வாகம் பாலாற்றில் உள்ள தலைமை நீர் நிலையத்தை, தொழிற்சாலை ன் மேற்புறத்தில், பாலாற்றில் அமைக்க துரிதமான நட டிக்கையை எடுக்கப் போவதாக ஒப்புக்கொண்டு இருக்கிறார் -ள். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து அவர்களைக் கண்காணித்து வருகிறது. உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை என்று சொன்னால் அந்த ஆலையை மூடுவதற்குக்கூட இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஒரு தொழில் வளருகின்றபோது, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கடும் நடவடிக்கை எடுத்தால் இந்தத் தொழிலை மூடுவதற்குண்டான நிலைமை அங்கே ஏற்படும். நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்திலே பாடி இருக்கிறார்கள்; ''ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி'' என்று. (மேசையைத்

[1994 மே 5

தட்டும் ஒலி) அதைப்போல, ''தொழிலும் வளரணும், சுற்றுப் புறச் சூழலும் பாதுகாக்கப்படணும்'' என்பதே மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய லட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 533, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

533—

இளம் விதவைகள் மறுவாழ்விற்கு அரசு உதவியளித்தல்.

*33238—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறுமணம் செய்துகொள்ள விரும்பும் இளம் விதவை கள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு மறுமணம் செய்து வைக்கத் தேவையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா?

(ஆ) விதவைகளை மணம் செய்து கொள்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) அரசு ஆய்வு செய்யும்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கோரிக்கையற்றுக் கிடக்குது வேரில் பழுத்த பலா'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் விதவைகளைப்பற்றி பாடியுள்ளார்கள். சமுதாயத்திலே, பல சமூகப் பிரிவில், மறுமணம் முழுமையாக, மரபு வழியாக மறுக்கப்படுகிறதே; மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சி யிலே, எத்தனையோ மாற்றங்களைச் செய்து வருகிறார்கள். இந்தச் சமூகக் கட்டுப்பாட்டினைத் தகர்த்தெறிந்து, மறு மணத்தை விரும்புபவர்களை, மாவட்ட சமூக நலத் துறைக்கு